பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 04 2024 7 15

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய ரிசர்வ் வங்கியின் 90வது ஆண்டு நிறுவன நாள் விழாவில் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொள்கிறார்.

2. மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பில் சேர்வதற்கான நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் இம்மாதம் 5ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

3. இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

4. இந்தியா – அமெரிக்க முப்படைகளின் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண கூட்டுப் பயிற்சி விசாகப்பட்டிணத்தில் நிறைவடைந்தது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் தில்லி – சென்னை அணியையும், குஜராத் – ஹைதராபதத் அணியையும் வென்றன.

<u>*------ இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

இந்திய ரிசர்வ் வங்கி 90 ஆண்டுகளை கடந்து சாதனை படைத்துள்ளது.

மும்பையில் இன்று நடைபெறும் இந்திய ரிசர்வ் வங்கியின் 90வது ஆண்டு கொண்டாட்டங்களில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சக்திகாந்த தாஸ் ரிசர்வ் வங்கியின் சாதனைகள் குறித்து உரையாற்ற உள்ளார்.

1935ஆம் ஆண்டு இதே நாளில் இந்திய ரிசர்வ் வங்கி நிறுவப்பட்டது.

<<<<>>>>

இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாடு உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார சமநிலைக்கு வழிவகுத்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், ஒருசில நாடுகள் மற்ற நாடுகளைக் கட்டுப்படுத்தும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்த உச்சிமாநாடு முன்வைத்ததாக குறிப்பிட்டார்.

அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக சிறிய நாடுகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் ஒட்டுமொத்தமாக ஆக்கிரமிப்பது உள்ளிட்டவை முடிவுக்கு வரவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் குரலுக்கு உலக நாடுகளின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது நாட்டின் கலாச்சாரம், நாகரிகம், வாழக்கை முறை, நம்பிக்கைகள் ஆகியவற்றை உலகிற்கு எடுத்துச் சொல்லும் தலமாகவும் ஜி20 மாநாடு அமைந்ததாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள இளைஞர்கள் கலாச்சாரத்தையும், ஆன்மிக நம்பிக்கைகளையும் அறிந்துகொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

<<<<>>>>

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பணிக்குழு, மக்களவைத் தேர்தல் குறித்து நேற்று விவாதித்தது.

புதுதில்லியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, நாடாளுமன்ற கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி, மூத்த தலைவர்கள் திரு. கே.சி. வேணுகோபால் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

உத்தரப்பிரதேசம் மற்றும் ஜம்மு-கஷ்மீர் தேர்தல் பிரச்சாரத்திற்கான காங்கிரஸ் கட்சியின் நட்சத்திரப் பேச்சாளர்களின் பட்டியலும் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ராகுல் காந்தி, திருமதி பிரியங்கா காந்தி, திரு. டி.கே. சிவகுமார், திரு. சச்சின் பைலட் உள்ளிட்டோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா ராஜஸ்தான் மாநிலத்தில் இன்று தமது இரண்டு நாள் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

ஜெய்ப்பூர், **Dausa, Churu, Nagaur** உள்ளிட்ட தொகுதிகளில் அவர் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பில் சேர்வதற்கான நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் இம்மாதம் 5ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாளான நேற்று மாணவர்களிடமிருந்து வந்த கோரிக்கையை ஏற்று இந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

மாணவர்கள், பள்ளி அடையாள அட்டை அல்லது அரசுத்துறை சார்ந்த புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை ஆகியவற்றைப் பயன்படுத்தி இத்தேர்வை எழுதலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நுழைவுத் தேர்வுகள் மே மாதம் 15ஆம் தேதி தொடங்கி 31ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் இன்று முதல் விநியோகிக்கப்பட உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்ய பிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையே, இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

<<<<>>>>

இந்தியா – அமெரிக்கா இடையே முப்படையினருக்கான பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கான கூட்டுப் பயிற்சி நேற்று விசாகப்பட்டிணத்தில் நிறைவடைந்தது.

கடந்த மாதம் 18ஆம் தேதி தொடங்கிய இப்பயிற்சியில் விசாகப்பட்டிணம் துறைமுகத்தில் கடற்படையினருக்கான பேரிடர் மீட்பு குறித்த நிலையான செயல்பாடுகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இரண்டாவது கட்டமாக 26ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரை காக்கிநாடாவில் நடைபெற்ற பயிற்சியில் கடல்சார் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மீட்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்திய கடற்படையில் போர்க்கப்பல்கள், டாங்கிகள், சிறியவகை விமானங்கள், ஹெலிகாப்டர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

இந்திய ராணுவத்தின் தரைப்படை, விமானப்படை மற்றும் அதிவிரைவு மருத்துவக் குழுவினர்கள் பங்கேற்ற பயிற்சி அளிக்கப்பட்டது.

அமெரிக்க விமானப்படை போர் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் இப்பயிற்சியில் ஈடுபட்டன.

இருநாடுகளின் கலாச்சார பரிவர்த்தனையின் அடையாளமாக ஹோலிப் பண்டிகையும் கொண்டாடப்பட்டது.

<<<<>>>>

தேர்தல் ஆணையத்தின் **c-Vigil** செயலியை பயன்படுத்தி தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்து மக்கள் புகார்களை அளிக்கலாம்.

தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பான புகைப்படங்கள், காணொலிகள் ஆகிய ஆதாரங்களை பதிவு செய்யவும் இந்த செயலியில் வசதி செய்யப்பட்டுள்ளது.

**c-Vigil** செயலியை முறையாகப் பயன்படுத்தி தேர்தலை நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

திரிபுரா மாநிலத்தில் பறக்கும் படையினர் நடத்திய சோதனைகளின்போது 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள், மதுபானம் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த திரிபுரா மேற்கு மக்களவைத் தொகுதி தேர்தல் அலுவலர் திரு. விஷால்குமார், மோகன்பூர் ஜிரானியா பகுதிகளில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பிலான மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவித்தார்.

இம்மாநிலத்தில் வருமான வரித்துறையினரும், மாநில வணிகவரி துறையினரும் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுக்கும் நோக்கில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

வாடிகன் செயிண்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட ஈஸ்டர் தின நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உடனடியாக போர்நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

இப்போரில் பிணைக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை செய்வதற்கு வழி ஏற்படுத்தி தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இப்போரினால் குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை போரின் தாக்கத்தில் இருந்து மீட்டுக் கொண்டுவர வேண்டும் என்றும் போப் பிரான்சிஸ் வலியுறுத்தினார்.

<<<<>>>>

வருமான வரி கணக்குகளை எளிமையாக தாக்கல் செய்வது குறித்த தொலைபேசி வழி கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்றிரவு மணி 9.30க்கு எஃப்.எம். கோல்டு சானலில் ஒலிபரப்பாக உள்ளது.

ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் தொலைபேசி வழியாகக் கேட்கப்படும் நேயர்களின் சந்தேகங்களுக்கு வருமான வரித்துறை ஆணையர் திரு. தரம்ஜித் சிங் பதிலளிக்க உள்ளார்.

இதில் பங்குபெற 011 234 21050 என்ற தொலைபேசி எண்ணில் இன்றிரவு 9.30 மணி முதல் நேரடியாக தொடர்புகொள்ளலாம்.

வாட்ஸப்பிலும் தங்களது சந்தேகங்களை பதிவு செய்ய

9 2 8 9 0 9 4 0 4 4 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இந்நிகழ்ச்சியை **newsonair** இணையதளம் மற்றும் ஆகாஷ்வாணி யூடியூப் சேனலிலும் நேயர்கள் கேட்கலாம்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்றிரவு விசாகப்பட்டிணத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 20 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

முதலில் களமிறங்கிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 191 ரன் எடுத்தது.

அந்த அணியில் டேவிட் வார்னர் 52 ரன்னும், ரிஷப் பந்த் 51 ரன்னும் எடுத்தனர்.

192 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய சென்னை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 171 ரன் மட்டுமே எடுத்து தோல்வியைத் தழுவியது.

தில்லி அணியின் முகேஷ்குமார் 3 விக்கெட்டுகளையும், கலீல் அகமது 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பையில் தொடங்கும் ஆட்டத்தில் மும்பை அணியும் - ராஜஸ்தான் அணியும் மோதுகின்றன.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு போட்டியில் குஜராத் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

முதலில் பேட் செய்த ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 162 ரன் எடுத்தது.

163 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, 19 புள்ளி ஒரு ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 168 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

**<<<<The End>>>>**